**கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம்- செயற்திட்டம் 02 இன் (அம்பத்தளை நீர் வழங்கல் முறைமை முன்னேற்றம் மற்றும் சக்தி சேமிப்பு செயற்திட்டம்)- 2020**

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்சித்திட்டம்- செயற்திட்டம் 02 இன் (அம்பத்தளை நீர் வழங்கல் முறைமை முன்னெற்றம் மற்றும் சக்தி சேமிப்பு செயற்திட்டம்) 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் பிரன்சிஸ் டி அபிவிருத்தி முகவரிற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2014 செப்தெம்பர் 29 ஆம் திகதிய சிஎல்கே 1008 -01 பி ஆம் இலக்க கடன் வசதி உடன்படிக்கையின் 3.4.2(எச்) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் என்னுடைய கருத்துரைகள் மற்றும் அவதானிப்புகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன

செயற்திட்டத்தின் கடன் வசதி உடன்படிக்கையின் பிரகாரம், முன்னைய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சாகவிருந்த தற்போதைய நீர் வழங்கல் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. கொழும்பு பெரும்பாக பகுதியில் நீர் வழங்கல் நுழைவுகள் மற்றும் நீர் முறைமை வினைத்திறன் நிலைபேண் தன்மையை விரிவாக்குவதே செயற்திட்டத்தின் குறிக்கோள்களாக உள்ளது. கடன் வசதி உடன்படிக்கைகளின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 13,000 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 100 மில்லியனானதுடன் அதில் ரூபா 9,100 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 70 மில்லியன் பிரான்சிஸ் டி அபிவிருத்தி முகவரால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. மிகுதி ரூபா 3,900 மில்லியன் தொகைக்கு சமமான ஐ.அ.டொலர் 30 மில்லியன் இலங்கை அரசாங்கத்தால் பங்களிப்புச் செய்யப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2014 செத்தெம்பர் 29 இல் தொடங்கியிருந்ததுடன் 2019 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. எவ்வாறாயினும் செயற்திட்ட நடவடிக்கைகளின் பூர்த்தியாக்கல் திகதி 2022 மே 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 முனைப்பழிவுள்ள அபிப்பிராயம்

என்னுடைய அறிக்கையின் 2.1 ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் தாக்கங்களை தவிர, 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும்

விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புகளும் ஆளுகையுடன் அவற்றினை சாட்டுதல் செய்தலும்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வற்காக கணக்காய்வாளருடைய பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம்

ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.1. கணக்கீட்டுக் குறைபாடுகள்

| இல | கணக்கீட்டுக் குறைபாடுகள் | தொகை ரூபா மில்லியன் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | ரூபா 133.63 மில்லியன் தொகையான நாணயமாற்று இலாபம் நிதி நிலைமைக் கூற்றில் நிதி மூலவளத்தின் கீழ் புறம்பாகக் காட்டுவதற்குப் பதிலாக தவறாக நடைபெறும் வேலைகளிலிருந்து கழித்துக் காட்டப்பட்டிருந்தது. | 133.63 | F/Ss 2021 இலிருந்து உத்தேசிக்கப்பட்ட சீராக்கல் கழித்துக் காட்டப்படும். | நாணயமாற்று இலாபம் நிதி நிலைமைக் கூற்றில் நிதிமூலவளத்தின் கீழ் புறம்பாகக் காட்டப்பட வேண்டும். |
| (ஆ) | செயற்திட்டத்தின் சார்பில் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலரமப்புச் சபையால் மக்கள் வங்கிக்கு கெலுத்தப்பட்ட ரூபா 83.53 மில்லியன் தொகையான கடன் வட்டி மீளாய்வாண்டின் நிதிக்கூற்றிற்கு கொண்டு வரப்பட்டிருந்தது. | 83.53 | செயற்திட்டத்தின் நிதிக்கூற்று இறுதியாக்கப்படுகின்றபோது இந்த கணக்கு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை பேரேடுகள் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. நாங்கள் செயற்திட்டத்தினுடைய கொடுக்கல் வாங்கல்களை பின்னரே கணக்குகளிற்குள் எடுத்திருந்தோம். | செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்கு முன்னர் சம்பந்தப்பட்ட செயற்திட்டத்தின் சகல செலவினங்களையும் இனங்கண்டு கணக்கிற்கு எடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | ரூபா 77.74 மில்லியன் கூட்டுத் தொகையான பெறுமதி சேர் வரி 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் அரசாங்க பங்களிப்பு பெறுகைகளிற்கு எதிராக சரிசெய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் | 77.74 | F/Ss 2021 இலிருந்து உத்தேசிக்கப்பட்ட சீராக்கல் கழித்துக் காட்டப்படும். | நிதிக்கூற்றுக்களில் அரசாங்க பங்களிப்பின் கீழ் கணக்கு வைப்பதற்கும் பெறுமதி சேர் வரி தொகைகள் புறம்பாக காட்டுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | சபையின் 2021 பெப்ரவரி 12 ஆந் திகதிய 01-2021 ஆம் இலக்க சுற்றறிக்கை கணக்கீட்டு அறிவுறுத்தல்களின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் அரசாங்க பங்களிப்பு கொண்டுவரப்பட்டும் பெறுமதி சேர் வரி தொகைகள் புறம்பாக காட்டப்பட்டுபட்டிருக்கவில்லை. | | | |
| (ஈ) | 2020 திசெம்பர் 31 வரை ஒப்பந்தகாரரிடமிருந்து தாமதக் கட்டணங்களாக ரூபா 1.14 மில்லியன் தொகை கழிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இது சம்பந்தப்பட்ட செலவினக் கணக்குகளிலிருந்து கழிப்பதற்குப் பதிலாக நிதி நிலைமைக்கூற்றின் ஏனைய பொறுப்புக்களில் காட்டப்பட்டிருந்தது. | 1.14 | செயற்திட்டமானது கணக்குப் புத்தகங்களில் சரியான பதிவினை செய்வதற்கு ஏற்கனவே கணக்காய்வாளரின் ஆலோசனையை வேண்டியிருந்தது. | கழிக்கப்பட்ட தாமதக் கட்டணங்களை உள்ளபடியான கிரயம் வரை கழிப்பதற்கு சம்பந்தப்பட்ட செலவினக் கணக்கிற்கு மாற்றப்பட வேண்டும். |
| (உ) | 13,691 மீற்றர் குழாயிடல் வேலைகளை பூர்த்தியாக்கிய பின்னர் மேற்பரப்பில் காப்பற் இடுவதற்காக வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் மாகாண அபிவிருத்தி அதிகாரசபைக்கு ரூபா 403 மில்லியன் தொகை (பெறுமதி சேர் வரி) செலுத்தப்பட்டிருந்தது. அதில், 2020 திசெம்பர் 31 வரை 588 மீற்றர் மேற்பரப்பில் காப்பட் இடல் வேலைகள் மாத்திரம் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் போது எந்தவொரு மேற்பரப்பில் காபற் இடல் வேலைகளும் | 382.63 | தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை முந்திய ஒப்பந்தகாரரின் பரஸ்பர இடை நிறுத்தம் காரணமாக (குறைவான கேள்வி) ICB 03 ஒப்பந்தத்தின் கீழ் குழாயிடல் மேற்கொள்வதற்கும் இரண்டாவது குறைவான கேள்வியாளருக்கு ஒப்பந்தத்தை மீள வழங்குவதற்கும் இயலாதிருந்தது. ICB 03 ஒப்பந்தம் 2020.10.07 இல் மீள தொடங்கப்பட்டிருந்தது. | குறைபாட்டினை திருத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

செய்யப்பட்டிருக்கவில்லை. இதன்விளைவால், 13,103 மீற்றர் பூர்த்தியாக்கப்பட்ட மேற்பரப்பில் காப்பட் இடல் வேலைகள் தொடர்பில் அண்ணளவாக ரூபா 382.63 மில்லியனால் நடைபெறும் வேலைகளின் பெறுமதி அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 பௌதீக முன்னேற்றம்

செயற்திட்டமானது 2014 செப்தெம்பர் 29 இல் அதன் நடவடிக்கைகளை தொடங்கியிருந்ததுடன் 2019 யூன் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. எவ்வாறாயினும், செயற்திட்டத்தால் பட்டியலிடப்பட்ட காலப்பகுதிக்குள் இலக்குகளை அடைய தவறிய காரணத்தால் செயற்திட்ட காலப்பகுதி 2022 மே 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம், 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஒட்டுமொத்த திரண்ட பௌதீக முன்னேற்றம் 38.46 சதவீதமாக இருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்டமானது மீளாய்வாண்டின் போது 15.36 சதவீதம் அடையப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. எனவே, செயற்திட்டத்தின் ஆக்கக்கூறு வாரியான முன்னேற்றம் பின்வருமாறு உள்ளன.

| இல | நடவடிக்கை | அலகுகள் | எதிர்பார்க்கப்பட்ட இலக்கு | 2020 திசெம்பர் இல் உள்ளவாறு அடையப்பட்ட இலக்கு | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|---|---|---|
| (அ) | 5 கிமீற்றர், 1200 மிமீ டிஐ குழாய்களை வழங்கி குழாயிடுவதுடன் கோத்தட்டுவ 15000 கன மீற்றர் நீர்தேக்கம் | சதவீதம் | 8 | 3 | ஒப்பந்த மற்றும் செயற்திட்ட காலப்பகுதி இரண்டும் நீடிக்கும் சாத்தியம். | உடன்படுகிறோம். | வரையறுத்த கால வரையறைக்குள் வழமையான வேலைகளை பூர்த்தியாக்கும் நோக்கில் நெருக்கமாக கண்காணிக்க வேண்டும். |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | மற்றும் மொரகஸ்முல்லவில் பூஸ்ரர் இறைக்கும் இல்லங்களின் நிர்மாணம் (ICB-03) | | | | | | |
| (ஆ) | எலியகவுஸ் நீர்தேக்கத்திற்கு அம்பத்தளையிலிருந்து 9 கி.மீற்றர் டச்சு வகை இரும்புக் (1200 மிமீ டையா) குழாய்கள் மற்றும் உப பாகங்களை வழங்கி குழாயிடுதல். (ICB-04) | | | | ஒப்பந்த காலப்பகுதி நீடிக்கும் சாத்தியம் மற்றும் செயற்திட்டத்தின் பூர்த்தியாக்கல் பாதகமாக பாதிக்கும். | உடன்படுகிறோம். ஒப்பந்தகாரரின் குறைவான செயலாற்றல் மற்றும் கோவிட்-19 நோய்த் தொற்று காரணமாக தாமதம் ஏற்பட்டிருந்தது. | திருத்தப்பட்ட கால வரையறைக்குள் வழமையான வேலைகளை பூர்த்தியாக்கும் நோக்கில் நெருக்கமாக கண்காணிக்க வேண்டும். |
| | - குழாய் குழாயிடல் | மீற்றர் | 8,431 | 4,916 | | | |
| | - அமுக்க பரிசோதனை | மீற்றர் | 7,163 | 714 | | | |
| | - ஒட்டு மொத்த ஒப்பந்த முன்னேற்றம் | சதவீதம் | 88.98 | 53.20 | | | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| (இ) | ஏனைய உற்பத்தி வசதிகளின் குறைக்கப்பட்ட உராய்வு மற்றும் காசாக்கல் ஊடாக முறையான இயலளவு, பரிமாற்ற நட்டம் குறைத்தலுடன் திறனான பம்பினை பொருத்துவதன் மூலம் சக்தி சேமிப்பிற்காக அம்பத்தளை உற்பத்தி வசதிகளின் நியாயமான காசாக்கல் மற்றும் சக்தி சேமிப்பு (ICB-05) | சதவீதம் | 100 | 33.22 | செயற்திட்டத்தின் கீழ் பரிமாற்ற நட்டத்தை குறைத்தல் மற்றும் சக்தி சேமிப்பு என்பவற்றின் அடைதலில் தாமதம். | உடன்படுகிறோம். அவை ஒப்பந்தகாரரின் குறைவான செயலாற்றல் காரணமாக தாமதம் ஏற்பட்டிருந்தது | திருத்தப்பட்ட கால வரையறைக்குள் வழமையான வேலைகளை பூர்த்தியாக்கும் நோக்கில் நெருக்கமாக கண்காணிக்க வேண்டும். |
| (ஈ) | வடிவமைப்பு மீளாய்வு மற்றும் நிர்மாண மேற்பார்வை ஆலோசனை சேவைகள் (DRCSC) | பட்டியலிடப்பட்ட ஒப்பந்த காலப்பகுதிக்குள் செயற்திட்டத்திற்கு எதிர்பார்க்கப்பட்ட ஆலோசனை சேவைகள் பெறப்பட முடியவில்லை. இதன்விளைவால், ஆலோசனை ஒப்பந்த காலப்பகுதி 2022 பெப்ரவரி 28 வரை இரண்டு தடவை நீடிக்கப்பட்டிருந்தது. | | | செயற்திட்டத்தின் ஆலோசனை காலப்பகுதியின் நீடிப்பு | உடன்படுகின்றோம். ஆலோசனை ஒப்பந்தம் நிர்மாண ஒப்பந்த பொதியின் தாமதம் காரணமாக நீடிக்கப்பட்டிருந்தது. | வேலைகளை நிறைவேற்றுவதற்கு உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியதுடன் திருத்தப்பட்ட கால வரையறைக்குள் செயற்திட்டத்தை பூர்த்தியாக்கும் நோக்கில் |

ஒப்பந்தகாரர் வழமையான வேலைகளை நெருக்கமாக கண்காணிக்க வேண்டும்.

## 3.2. ஒப்பந்த நிர்வாகம்

| இல. | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
| --- | --- | --- | --- |
| (அ) | செயற்திட்டத்தின் சிவில் நிர்மாண வேலைகள் உடன்பட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தியாக்கப்பட்டிருக்காததுடன் வடிவமைப்பு மீளாய்வு மற்றும் நிர்மாண மேற்பார்வை ஆலோசனை சேவைக்கான ஒப்பந்தம் அந்த தாமதத்திற்கான பொறுப்பாக உள்ளது ஆனால், ஆலோசனையாளரின் ஒப்பந்த காலப்பகுதி நிலையை கருத்திற்கொள்ளாமல் 2022 ஒக்தோபர் 22 வரை நீடிக்கப்பட்டிருந்தது. | சில பிரச்சனைகளால் செயற்திட்ட கட்டுப்பாடு பின்னடைந்திருந்தது. நிதி மேற்பார்வை, பாதீட்டு ஒதுக்கீட்டு இன்மை மற்றும் கோவிட்- 19 நோய்தொற்று சில உதாரணங்களான இருந்தன. செயற்திட்ட முகாமைத்துவ பிரிவு, ஆலோசனையாளர் மற்றும் செயற்திட்ட அமுலாக்கல் பிரிவு செயற்திட்ட நிலை மற்றும் செயற்திட்ட காலப்பகுதி நீடிப்பு என்பவற்றினை நெருக்கமாக கண்காணிக்கின்றது. | ஆலோசனையாளர் ஈடுபடுத்தப்பட வேண்டியிருந்ததுடன் ஒப்பந்தங்களின் தகராறுகள், முரண்பாடுகள் மற்றும் இடைநிறுத்தலை தடுப்பதற்கு உடனடியாக நடவடிக்கைகள் எடுக்க வேண்டியதுடன் கால வரையறைக்குள் பூர்த்தியாக்கும் நோக்கில் வழமையான ஒப்பந்த வேலைகளை நெருக்கமாக கண்காணிக்க வேண்டும். |
| (ஆ) | நிலக்கீழ் நீர்த் தேக்கம் மற்றும் குழாய்கள் வழங்கி குழாயிடுவதுடன் விரைவான இறைக்கும் இல்லம் என்பவற்றின் நிர்மாணத்திற்கான புதிய ஒப்பந்தம் 2020 ஒக்தோபர் 07 இல் அதன் நடவடிக்கைகளை தொடங்கியிருந்ததுடன் 2020 யூன் 06 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. ஒப்பந்த முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம், ஒப்பந்தத்தின் ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றம் | உடன்படுகின்றோம். பின்வரும் காரணங்கள் காரணமாக தாமதங்கள் ஏற்பட்டிருந்தது.<br>ஒப்பந்தகாரர்களுடைய செயலாற்றல் மிகவும் நலிவாக உள்ளது.<br>ஒப்பந்தகாரர் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களை வழங்குவதற்காக எல்சீ திறப்பதற்கு இயலாதிருந்தது.<br>ஒப்பந்த முன்னேற்றம் கோவிட்- 19 நோய் | வேலைகளை நிறைவேற்றுவதற்கு உடனடியாக நடவடிக்கைகள் எடுக்க வேண்டியதுடன் வழமையான ஒப்பந்த வேலைகளை நெருக்கமாக கண்காணிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அத்திகதியில் உள்ளவாறு இலக்கிடப்பட்ட 8 சதவீத முன்னேற்றத்திற்கு எதிராக 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 3 சதவீதமாக இருந்ததுடன் 2021 யூன் 30 இல் உள்ளவாறு 16.58 சதவீதமாக இருந்தது. எனவே, ஒப்பந்த காலப்பகுதிக்குள் ஒப்பந்தத்தை பூர்த்தியாக்கும் சாத்தியம் ஐயத்திற்கிடமாக உள்ளது. | தொற்று காரணமாக பல தடவை பாதிக்கப்பட்டுள்ளது. | |
| (இ) | முறையான இயலளவுடன் திறனான பம்பினை பொருத்துதல் ஒப்பந்தம் மூலம் சக்தி சேமிப்பிற்காக அம்பத்தளை உற்பத்தி வசதிகளின் நம்பகமான காசாக்கல் மற்றும் சக்தி சேமிப்பிற்கான முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம், 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒட்டு மொத்த பௌதீக முன்னேற்றம் எதிர்பார்க்கப்பட்ட 100 சதவீதத்திற்கு எதிராக 33.22 சதவீத மெதுவான முன்னேற்றத்தை காட்டியிருந்தது. வேலைகளை நிறைவேற்றுவதற்கு செயற்திட்ட முகாமைத்துவ பிரிவால் ஒப்பந்தகாரருக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்ட போதிலும் 2021 மே 31 வரை முன்னேற்றம் 37.01 சதவீதத்தில் இருந்தமை அவதானிக்கப்பட்டது. எனவே, பட்டியலிடப்பட்ட ஒபபந்த காலப் பகுதிக்குள் ஒப்பந்தத்தின் பூர்த்தியாக்கலின் சாத்தியம் ஐயத்திற்கிடமாகவுள்ளது. | ICB 05 ஒப்பந்தம் 2021 மார்ச் 12 இல் பூர்த்தியாக்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டதுடன் 2021 செப்தெம்பர் 01 வரை கால நீடிப்பு வழங்கப்பட்டிருந்தது. 4.1.3 இல் குறிப்பிடப்பட்ட காரணங்கள் ICB-05 ஒப்பந்தத்தின் தாமதத்திற்கான காரணங்களாக உள்ளன. | வேலைகளை நிறைவேற்றுவதற்கு உடனடியாக நடவடிக்கைகள் எடுக்க வேண்டியதுடன் வழமையான ஒப்பந்த வேலைகளை நெருக்கமாக கண்காணிக்க வேண்டும். |
| (ஈ) | அம்பத்தளையிலிருந்து எலியகவுஸ் நீர்தேக்கத்திற்கு 9 கி.மீற்றர் டச்சு வகை இரும்புக் (1200 மிமீ டையா) குழாய்கள் வழங்கி குழாயிடுதலிடுவதற்கான | இந்த ஒப்பந்தத்தின் கடன் வசதிகளை AFD ஆல் தற்காலிகமாக நிறுத்தியிருந்தமையால் இடைக்கால கொடுப்பனவிலுள்ள தாமதம் | வேலைகளை நிறைவேற்றுவதற்கு உடனடியாக நடவடிக்கைகள் எடுக்க வேண்டியதுடன் வழமையான ஒப்பந்த |

| | | |
|---|---|---|
| ஒப்பந்தத்தின் ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றம் (ICB-04) ஒப்பந்தம் தொடங்கிய திகதியிலிருந்து 4 ஆண்டுகளும் 5 மாதங்களும் கடந்த பின்னர் அத்திகதியில் உள்ளவாறு இலக்கிப்பட்ட 88.98 சதவீதத்திற்கு எதிராக 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 53.20 சதவீத மெதுவான முன்னேற்றத்தை காட்டியிருந்தது. மேலும், ஒப்பந்தத்தின் கீழ் வீதிப் பிரிவு இடப்பட்ட 2,450 மீற்றர் குழாய்களில் குழாயிடல் வேலைகள் முழுமையாக பூர்த்தியாக்கப்பட்ட பின்னர் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு கையளிக்கப் பட்டிருந்தது. இருந்தபோதிலும், 2018 ஆம் ஆண்டில் இடப்பட்டிருந்த 360 மீற்றர் குழாய்கள் வளைவுக் குழாய் திருத்த வேலைகள் மற்றும் அமுக்க பரிசோதனை வேலைகள் என்பவற்றின் தாமதம் காரணமாக 2021 யூன் 30 வரையும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | காரணமாக 2018 செப்தெம்பர் 01 இல் ஒப்பந்தகாரரால் இடைநிறுத்தப்பட்டிருந்தது. ஒப்பந்தமானது 1 ஆண்டு 03 மாதங்களின் பின்னர் 2019.11.25 இல் தொடங்கப்பட்டிருந்தது. ஒப்பந்தத்தின் முன்னேற்றம் கோவிட்-19 நோய்தொற்றால் பல தடைவ பாதிக்கப்பட்டது. மேலும், 4.1.2 இல் குறிப்பிடப்பட்ட காரணம் ஒப்பந்தத்தின் தாமதத்திற்கு தொடர்புபட்டதாக உள்ளது. | வேலைகளை நெருக்கமாக கண்காணிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.3 வேலைத்தள வருகைகளின் போது செய்யப்பட்ட அவதானிப்புகள்

| இல. | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | 2021 யூலை 27 இல் ICB-05 ஒப்பந்தத்தின் சிவில் நிர்மாண வேலைகளில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பௌதீக பரிசோதனையின் பிரகாரம், பதவியணியினர் வதிவிட கட்டிடம் மத்திய கட்டுப்பாட்டு நிலையம் தொடர்பில் கூரை பொருத்துதல், உட்பகுதி | ICB - 05 ஒப்பந்தின் பதவியணியினர் வதிவிட கட்டிடம் மற்றும் கட்டுப்பாட்டு கட்டிடம் என்பவற்றின் முன்னேற்றத்தை துரிதப்படுத்தவதற்கு ஒப்பந்தகாரருக்கு அவசியமான அறிவுறுத்தல்கள் | வேலைத்தளத்தில் தொழிலாளர் படையணியை அதிகரிப்பதற்கும் வேலைகளை துரிதப்படுத்துவதற்கும் மேலும் அறிவுறத்தல்கள் வழங்க வேண்டும் அதேபோல |

| | | | |
|---|---|---|---|
| | குழாயிடல், உட்பகுதி மற்றும் வெளிப்பகுதி பெயின்ர் அடித்தல், மின்சர கருவிகள் பொருத்துதல் போன்றன மற்றும் மத்திய கட்டுப்பாட்டு நிலையம் தொடர்பில் வயரிங் வேலைகள், உபகரணங்கள் பொருத்துதல் மற்றும் முறைமை பரீட்சித்தல் மற்றும் ஒப்படைத்தல் போன்ற சிவில் வேலைகள் 2021 யூலை 27 வரையும் பூரத்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கு மேல், நிலக்கீழ் நீர்தேக்தல் வேலைகளும் களப்பரிசோதனை திகதிவரை பூர்த்தியாக்கப் பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், அந்த வேலைத்தளங்களில் குறைவான தொழிலாளர் படையணி ஈடுபடுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | வழங்கப்பட்டிருந்தது. மேலும், கோவிட்-19 நோய்தொற்று நிலைமை காரணமாக தொழிலாளர், உபகரணங்கள் மற்றும் பொருள் வழங்கல்கள் பிரச்சனைகள் உள்ளன. | ஒப்பந்தகாரருடைய வழமையான ஒப்பந்த வேலைகளை நெருக்கமாக கண்காணிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2021 யூலை 27 இல் நிலக்கீழ் நீர்த்தேக்க நிர்மாண வேலைகள் மற்றும் குழாய் வழங்கி பொருத்தலுடன் உயர் அழுத்த இறைக்கும் இல்லம் என்பவற்றில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பௌதீக பரிசோதனையின் பிரகாரம், வேலைத் திட்டத்திற்கமைய நிர்மான வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. மேலும், கணக்காய்வு செய்யப்பட்ட தகதியில் மொறகஸ்முல்ல உயர் அழுத்த இறைக்கும் இல்லத்தில் எவ்வித நிர்மாண வேலைகளிலும் எந்தவொரு நபரும் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | உடன்படுகின்றோம். ஒப்பந்தகாரருடைய செயலாற்றல் வேண்டப்பட்ட மட்டத்தில் இருக்காததுடன் ஒப்பந்தகாரர் தாமதத்தை தடுப்பதற்கு தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கியிருந்தார். உயர் அழுத்த இறைக்கும் இல்லத்தில் தொழிலாளர்கள் இன்மைக்கான காரணம் ஒப்பந்தகாரருடைய வேலைத் தளத்தில் வலிமையான தடுப்பு கம்பி வளைத்தல் வேலைகளுடன் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | வேலைத்தளத்தில் போதிய தொழிலாளர் படையணியை ஈடுபடுத்துவதற்கும் வேலைகளை துரிதப்படுத்துவதற்கும் அறிவுறத்தல்கள் வழங்க வேண்டும் அதேபோல ஒப்பந்தகாரருடைய வழமையான ஒப்பந்த வேலைகளை நெருக்கமாக கண்காணிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.4 சர்ச்சைக்குரிய தன்மையான விடயங்கள்

| இல | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
| --- | --- | --- | --- |
| (அ) | அம்பத்தளை தண்ணீர் சுத்திகரிப்பு பொறியின் அதிகூடிய சக்தி நுகர்வை குறைப்பதற்கு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை 2019 திசெம்பர் 31 அளவில்குறைந்த செயலாற்றலுடைய பம்புகளை புனரமைப்பதற்கும் மீளப் பொருத்துவதற்கும், நிலக்கீழ் நீர்த் தேக்கத்தினை நிர்மாணித்தல் மற்றும் உராய்வு நட்டத்தை குறைப்பதற்கு புதிய பாரிய டயாமீற்றர் பிரதான பரிமாற்ற குழாயிடல் என்பவற்றினை திட்டமிட்டிருந்தது. இருந்தபோதிலும், செயற்திட்டத்தின் கீழான எந்தவொரு ஒப்பந்தங்களும் 2020 திசெம்பர் 31 வரை பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. இதன்விளைவால், 2020 ஆம் ஆண்டு இறுதியளவில் அம்பத்தளையில் தண்ணீர் சுத்திகரிப்பு பொறியின் மாதாந்த சராசரி மின்சார கட்டணங்கள் ரூபா 67.52 மில்லியனாக இருந்ததுடன் மேற்குறித்த உயர்ந்த மின்சார கட்டணம் திட்டமிடப்பட்டவாறு குறைப்பதற்கு முடியாதிருந்தது. | உடன்படுகின்றோம் | திருத்திய கால வரையறைக்குள் செயற்திட்டத்தை பூர்த்தியாக்குவதற்கு அதிகூடிய முயற்சி எடுக்க வேண்டும். . |
| (ஆ) | ஒப்பந்த நடவடிக்கைகள் தொடங்கி 53 மாதங்கள் கடந்த பின்னரும் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒப்பந்தத்தின் பௌதீக முன்னேற்றம் 53.2 சதவீதமான மெதுவான முன்னேற்றத்தை | அதிகளவான ஒப்பந்தகாரருடைய கோரிக்கைகள் கொடுப்பனவு தாமதம் மற்றும் கோவிட்-19 நோய்தொற்று காரணமாக ஏற்பட்டிருந்தது. | தகராறுகள், முரண்பாடுகள் மற்றும் தாமதக் கொடுப்பனவுகளை தடுப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் பட்டியலிடப்பட்ட |

| | | | |
|---|---|---|---|
| | காட்டியிருந்த போதிலும், ரூபா 1,115.94 மில்லியன் கூட்டுத் தொகையான கோரிக்கைகள் வேண்டப்பட்டதுடன் அதில் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒப்பந்தகாரரால் இலாப இழப்பாகவும் இடைநிறுத்தல் காலப்பகுதிக்கான தாமத கொடுப்பனவிற்காகவும் கோவிட்-10 காலப்பகுதிககாக மேலதிக கட்டணங்களாகவும் ரூபா 25.53 மில்லியன் கோரப்பட்டிருந்தது. | | காலப்பகுதிக்குள் பூர்த்தியாக்கும் நோக்கில் வழமையான வேலைகளை நெருக்கமாக கணக்காணிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.5 குறைவாகப் பயன்படுத்திய வளங்கள்

| இல | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | கடனளிக்கும் முகவரால் செய்யப்பட்ட ரூபா 9,100 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 70 மில்லியன் நிதியளிப்பதற்கு உடன்பட்ட போதிலும் செயற்திட்ட நடவடிக்கைகள் தொடங்கி 6 ஆண்டுகளும் 3 மாதங்களும் கடந்த பின்னர் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒதுக்கீட்டின் 24 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 2,792 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 16.68 மில்லியன் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் விளைவால், 2020 திசெம்பர் 31 வரை கைதவிர்க்கப்படாத மீதிகள் சார்பில் அரசாங்கத்தால் ரூபா 308.27 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 1.93 மில்லியன் கூட்டுத்தொகையான கடப்பாட்டுக் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருந்தது. | உட்பிரிவு 4.3 மற்றும் உட்பிரிவு 4.4 இல் விவாதிக்கப்பட்ட சகல காரணங்களும் கைதவிர்ப்பு காரணங்களிற்காக நிகழ்ந்தது. | நீடிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் சகல நடவடிக்கைகளையும் பூர்த்தியாக்குவதற்கு அதிகூடிய முயற்சி எடுக்க வேண்டும். |

## 3.6 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

| இல | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | ICB- 03 ஒப்பந்தம் தொடர்பில் முரண் கட்டளைக் குழுவால் 45 முரண் கட்டளைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் ரூபா 158.70 மில்லியன் தொகை அனுமதிக்கப்பட்டிருந்த போதிலும் 2020 திசெம்பர் 31 வரை முரண் கட்டளைக் குழுவிடமிருந்து அனுமதி பெற்றுக் கொள்ளாமல் செயற்திட்டத்தால் ரூபா 38.64 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அந்த தொகை 2021 மே 31 அளவில் ரூபா 77.67 மில்லியன் வரை அதிகரித்திருந்தது. | ஒப்பந்தகாரரால் மேற்கொள்ளப்பட்ட வேலைகளிற்காக முரண் கட்டளைக் குழுவிடமிருந்து அனுமதி பெற்றுக்கொள்ளாமல் செயற்திட்டத்தால் சான்றுபடுத்திய சகல கொடுப்பனவுகளும் அத்தகைய முரண் கட்டளைகளிற்காக செயற்திட்ட மதிப்பாய்வு அடிப்படையில் இருந்ததுடன் பொது முகாமையாளரிடமிருந்து (NWSDB) அனுமதிகள் பெறப்பட்டிருந்ததுடன் பொறியியலாளர் ஒப்பந்தகாரர் நிர்ணயிக்கப்பட்ட வீதங்கள் மற்றும் விலைளுடன் உடன்பட்டிருந்தது. | விலைகள் பேரம்பேசலிற்காகவும் நீண்ட காலம் தாமதப்படுத்தாமல் முரண் கட்டளைக் குழு அனுமதிகள் பெறுவதற்காகவும் திறனான பொறிமுறையொன்று தாபிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2018 ஆம் ஆண்டில் ICB-5 ஒப்பந்தகாரருக்கு ஐ.அ.டொலர் 2.87 மில்லியனிற்கு சமமான ரூபா 514.79 மில்லியன் தொகையான தொழிலாரம்பிப்பு முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது. ஒப்பந்தத்தின் பட்டியலிடப்பட்ட பூர்தியாக்கல் திகதி 2020 திசெம்பர் 31 ஆக இருந்த போதிலும், ஒப்பந்தத்தின் குறைவான முன்னேற்றம் காரணமாக 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தால் எந்தவொரு தொழிலாரம்பிப்பு முற்பணங்களும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | முற்பணக் கொடுப்பனவுகள் ஒவ்வொரு இடைக்கால கொடுப்பனவு சான்றிதழ்களிலிருந்தும் தானாகவே அறவிடப்படும். 2021 மார்ச் மாதத்தில் வழங்கப்பட்ட இறுதி IPC (IPC 05) இன் பிரகாரம், முற்பணக் கொடுப்பனவுகளிலிருந்து ஐ.அ.டொலர் 128,958.60 ஆன தொகை அறவிடப்பட்டிருந்தது. | கால நீடிப்புகள் இல்லாமல் பட்டியலிடப்பட்ட வேலைத் திட்டத்திற்கமைய நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டு பூர்த்தி செய்யப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (இ) முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் 2010 யூலை 26 ஆந் திகதிய 05 ஆம் இலக்க சுற்றறிக்கையில் வேண்டப்பட்டவாறு செயற்திட்டத்தின் கொடுக்கல்கள் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் உள்ளக கணக்காய்வு பிரிவால் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இது செயற்திட்டத்தின் கட்டுப்பாட்டினை பின்னடையச் செய்துள்ளது. | உள்ளக கணக்காய்வை மேற்கொள்வாற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |